கிட்டுப் பார்த்திருக்கிறார்கள். இந்த மண்ணில் இந்தச் சூழ்நிலையில் நல்ல வளர்ச்சியில்லை என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். எல்லா மரங்களும் எல்லா இடங்களிலும், எல்லா சீதோஷ்ணங்களிலும் வந்து விடும் என்று சொல்ல முடியாது. அந்த அந்த இடங்களிலே அந்த அந்த சூழ்நிலைகளுக்கேற்ப வளருகின்றன, வளராமல் போகின்றன. மேலும் நாம் மேற்கொண்டு இருக்கின்ற காடு வளர்ப்புப் பணியிலே புதிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு பயிரிட முடியுமா என்பதைக் கண்டறியும்படி நாம் வனத் துறைக்கு ஆலோசனை வழங்கலாம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே தேவைப்படுகின்ற பீடிகள் எவ்வளவு ? தமிழகத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற அளவு எவ்வளவு ? வெளி மாநிலங்களிலிருந்து எவ்வளவு பெறுகிறோம் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரத்தை அறிவிக்க வேண்டிய பொறுப்பிலே உள்ள அமைச்சர் அவர்களிடத்திலேயே கேள்வி கேட்டால் தக்க பதில் கிடைக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம்

*வினா எண் 267 : திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு எண்ணியுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையிலே ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுவதாக நான் ஒரு குறிப்பிலே பார்த்தேன். அங்கே தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுமா ? குறுகிய காலத்திலே தேங்காய் உற்பத்தியாகும் ஜாதி தென்னை மரங்கள், நெட்டை, குட்டை, வீரிய, ஒட்டு தென்னைக் கன்றுகளை தஞ்சை மாவட்டத்திலேயும், மற்ற வேறு இடங்களிலேயும் வளர்க்கின்ற முறையிலே மண்வளத்தைப் பார்த்து ஆராய்ச்சி செய்கின்ற ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டால் ஆங்காங்கே கயிறை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் சிறு தொழில்கள் அதிகமாக வளருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதால் அப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

[1981 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தஞ்சை பட்டுக்கோட்டைக்குப் பக்கத்திலே ஏற்கெனவே ஒரு ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. அது வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது. புதிதாக ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கின்ற செயற் குறிப்பு இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை பகுதியிலே இருக்கின்றது என்று இப்போது சொன்னார்கள். மூலக் கேள்விக்குப் பதில் அளிக்கின்ற போது இல்லை என்று சொன்னார்கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த உள்ளதா என்பது, அதற்கு பதில் சொன்னார்கள். இப்போது ஏற்கெனவே இருப்பதைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : பல்வேறு இடங்களிலே உள்ள மண்வளப் பாதுகாப்பைப் பார்த்து வீரிய தென்னங் கன்றுகளை நட்டு வளர்ப்பதற்கு ஏற்ற வகையிலே பல்வேறு இடங்களிலே ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஆராய்ச்சிக்கூடங்களை அமைக்கின்ற பொறுப்பு, அவைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பு பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தான் அதைப்பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

திரு. பொ. உத்திராபதி : நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் முன்னதாக இல்லை என்று சொன்னார்கள். வேறு ஒரு இடத்திற்கு மாற்றி விட்டதாகச் சொல்கிறார்கள். சென்ற புயல் காலத்திலே அநேகமாக தென்னை மரங்கள் எல்லாம் அழிந்து விட்டன. தஞ்சை மாவட்டத்திலே முத்துக்கோட்டை, கம்பிக்கோட்டை, பட்டுக்கோட்டை பகுதிகளிலே தென்னை

[முற்பகல் 9·40.]

மரங்கள் அதிகமாக உள்ளன. எனவே, அந்தந்தப் பகுதிகளில் அரசாங்கம் ஆராய்ச்சி நிலையத்தை எதிர் காலத்தில் ஏற்படுத்துவதற்குப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்ததைப்போல இதற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பு இல்லை ; வேளாண்மைத் துறைக்கும் தொடர்பு

இல்லை. பல்கலைக் கழகம்தான் இதுபோன்ற ஆராய்ச்சிக் கூடங்களை இனிமேல் அமைக்க முடியும். ஏற்கனவே தஞ்சை மாவட்டம் வேப்பங்குளத்தில் இருக்கிறது. அந்த ஆராய்ச்சிக் கூடமே, சொல்லக் கூடிய கருத்துக்களை ஏற்றுப் பணி புரியும்.

செல்லம்பட்டி ஒன்றியத்தில் நெற்பயிர்களுக்குச் சேதம்

*வினா எண். 268 : திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியன் பகுதியில் '' புகையான் '' நோய் நெல் பயிர்களில் பரவி இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டு இருக்கிறது. ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு மூலம் புகையான் பாதிப்பு பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செல்லம்பட்டி பஞ்சாயத்து யூனியனில் புகையான் நோய் பயிர்களைத் தாக்கி அதற்காக அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, வேளாண்மைத் துறைக்கும் தெரிவிக்கப்பட்டு அதற்கு மேலும் நான்கைந்து நாட்கள் மருந்து அடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. பஞ்சாயத்து யூனியனில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக நான்கு நாட்கள் தாமதம் ஆகிவிட்டது. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது போன்ற ஒட்டு மொத்த மருந்து தெளிப்புப் பணி, ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு அதை வேளாண்மைத்துறை செய்கிறது. 1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் அன்று தீர்மானத்தைப் பெற்று மறுநாளே மருந்து அடிக்கப்பட்டிருக்கிறது.